
இல்லற தர்மம்
I & II
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஈஸ்வர தர்மம்

இதழ் I & II



(ஸத்திய வாக்கு) ①

ஸத்தியம் பேசு.

தர்மம் செய்.

நாவை அடக்கு.

கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்."

"ஸ்ரீ ஸத் குரு திருவடி துணை! நம்பினோர் கெடுவதில்லை!"

"தெய்வம் மனுஷ்ய ரூபேண!"

கலியுகத்தில், உன் தெய்வம், மனித வடிவில் தான் வரும். வர வேண்டும்! அதுவே நியதி! அதுவே விதி! உன் சாதனையை அனுசரித்து அவசியம் நேரில் வரும். இது இந்நாளையின் அனுபவம்.

"யத்பாவம் தத் பவதி!"

உன்னை எது எதுவாக பாவனை செய்கிறாயோ, அது அதுவாக நீ ஆவாய். நாம ரூப சொந்த பந்த உறவாக, பாவனை செய்தால் அது ஆவாய். ஸ்ரீ பகவானாகவும், பரமாகவும், நீ பாவனை செய்தால் நீ அது ஆவாய். இது இந்நாளையின் அனுபவம்.

"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்", ஓம்!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்! ஜெகம், பரமம், ஜீவர்களும், சிறிதும் இல்லை!"

# திரு ஆலவாய் உறையும் மெய் அன்பர்களுக்கு

ஓர் பணிவான விண்ணப்பம்!

# இல்லற தர்மத்தை

சற்று தொட்டு காட்டுகிறோம்.

(பிரணவத்தின் பக்கத்தில், உள்ள வாசகம் மிக, மிக, மிக, முக்கியம் ஆகும்!)



இல்லற தர்மம் :- (2)
இதை முறைப்படி
அனுஷ்டித்தால் அவஸ்யம்
மோக்ஷ வீடு என்னும்
முக்தியை அடையலாம்.
தெய்வமே நாம் என
ஆன்மா இந்த
இல்லற தர்மமானது
இல்லாத தர்மமாக (வேண்டாததாக) முடிவுறும்.
அல்ல பாத தர்மமாக மாறினைகொடுக்கும்.

அன்பும்! அறமும்! உடைத்தாயின்;
இல்வாழ்க்கை;
# பண்பும்! பயனும்! அது (குறள்)

அன்பான குழந்தைகளே! உங்கள் குடும்பம், ஓர்
**கோவிலாக** வேண்டும். அங்கு தான்,
உங்கள் தெய்வத்தை உறைவாம்! உறையவும்
(ஸ்தாபனம் செய்யவும்) உங்களால் முடியும்!
(உங்களால் முடியாததை, இப்பைத்தியம் புலம்பாது)
இதன் முதல் பாடமே?????

# அடங்கு! அடங்கு! அடங்கு!

அடக்காதே! அடக்காதே! அடக்காதே!
சொல்வாலும்! செயலாலும்! நீ **அடங்கும்**
போது தான், நீ அறம் என்ற **தர்மத்தை**
காத்தவனாகிறாய். நீ தர்மத்தை போற்றி, பாது காக்கும்
போது, அந்த தர்மம் உன்னை, அரவணைத்து ரக்ஷிக்கும்.
இது சத்தியம்! இது சத்தியம்! இது சத்தியம்!



வீட்டில் அம்மா அப்பா, தாத்தா பாட்டி, மாமன் மாமி, ஆகிய பெரியவர்கள் இருந்தால் நீ பெரியவனாகியவனா ஆனாலும் அவர்களுக்கு பணிவுடன் சோர்வு அயர்வு இல்லாமல் சேவைசெய், அச்சேவையே உனக்கு நாளும் அருளும்.

**அன்பு:** இது உன் எண்ணமும், பார்வையும், வார்த்தையும், ஆகும், எப்படி என்றால்? கணவன், மனைவி, குழந்தைகள், அம்மா, அப்பா, அண்ண தம்பி, அக்கா தங்கை, மாமா மைத்துனன், இப்படி **உறவு முறை நாமமாக**, எண்ணுவதும், பார்ப்பதும், உரையாடுவதும், கொடுக்கல் வாங்கல், போக்கு வரவு, பண்ணுவதும் **பாசம்** ஆகும், அது **அன்பு** அல்ல, இதனால் தர்மம் பாதகாக்காது, இதனால், புண்ணிய பாபம் தான் சேரும். இப்புண்ணிய பாபமே, ஜனன மரண **பிறவியின்** சக்கரமே, ஆகவே, இவைகளை விட்டொழியுங்கள். பின் எப்படி பழக வேண்டுமென்றால்?



(4)

நீ அடங்கும் போது
இந்த நாமரூப உலகம்!
உன்னை வாழ வைக்கும்
நீ பிறரை அடக்கும் போது
இந்த நாமரூப உலகம்!
உன்னை அடக்கி அழித்து
விடும். அடங்கும் போது
நீ பணிந்திரும். அப்பணிவினால் உன் தர்மம்
உனக்கு வேண்டிய பணியை செய்யும்.

# தர்மம்:

மேலே சொன்ன, அனைத்து நாமரூபத்தினுள்ளும்,

ஸ்ரீபகவானே, அந்தர்யாமியாக இருந்து,

அவரவர் வினையின்படி, ஒழுங்காக நடத்துகின்றான்
அவை அனைத்தும், **அவரவர்வினை**

அவரவர், ஒழுங்காகச் செய்வது, ஸ்ரீபகவானின்
மாயாவாகிய **சூத்திரம்** ஆகும்!

ஆகவே தோற்றம், அனைத்தும் வெவ்வேறு, நாமரூபமாக
தோற்றினாலும், எல்லாவற்றிலும், ஒருவனே உள்ளான்

அந்த ஒருவனுக்கு, அன்னியமாய் **எதுவும்!**
**எவரும்!** இல்லவே இல்லை என்று உணர வேண்டும்.
இப்படி உணர்ந்து விட்டீர்களானால்?

(1) எல்லாம் ஸ்ரீபகவான் **பொருள்!**

(2) ,, ,, **செயல்!!**

(3) நாமும் அவனே! அவனே நாம்! எல்லாமும் எல்லாரும் **நாமே**
என சத்தியமாய், உணர வேண்டும்.



எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன் செயல்! ஆகி விட்டால் உனக்கு இருப்பு! உன் பொருள்! உன் செயல்! இல்லை என்றாகிவிடும். இதால் தர்மபத்னிக்கி இருந்து விடுபடலாம்.

நாமரூப, உறவு அற்றதை, மறந்து, எல்லாம் அவன் திருமீபாகவும்! அவன் பொருளாகவும்! அவன் இயக்கமாகவும்! நாமும் அவனாகவும்!

**அசைவற! ஆசையற!**

உணர்வதே **அன்பு** ஆகும் என, அனுபவ ஸ்ரீமஹான்கள், சொல்வது கேள்வி!

இந்த தர்மமும்! அன்பும்! இணைந்து, ஓர் குடும்பம் இருந்தால்! அது ஆலயமாகும்!

கொடுப்பதோ! வாங்குவதோ! உண்பதோ! இது ஸ்ரீபகவானின் பொருள்! ஸ்ரீபகவானின் செயல்! என உணர்வுடன், எந்த கருமமாற்றமும் இல்லாமல்,

**நான்! என்னுடைய! எனது!** ,,

எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையவை! எல்லாம் உனதே! என செய்தாலும்! பேசினாலும்! அது **அறம்** (தர்மம்) ஆகும்.



ஆசையே அமங்கலம். (6)
வேகமே பாபம்.
ஆத்திரம் அறிவு நாசம்.
பதறுகாரியம் சிதறும்.
பணிவே பாதை!
வாக்கே வாழ்க்கை!
வாக்கே அக்கினி!
பயமே பலிதம்!
கொடுத்ததை வாங்குகிறாய்! வாங்கியதை கொடுக்கிறாய்!

இந்த அன்பையும்! தர்மத்தையும்! கடைப்பிடிக்கும் போது,

(1) கணவன்! மனைவி! குழந்தை! இவர்களின் வாக்கு, பணிவாகவும்! கனிவாகவும்! வேகம் இல்லாமலும் **அமைதியாக** வர வேண்டும். இவ்விருவரும் ஒருவருக்கொருவர் எரிந்த வார்த்தை! எதிர் வார்த்தை! பேச வேண்டாம் என, உங்கள் பாதம் பற்றி வேண்டுகிறேன்.

(2) திருமணம் ஆகாத பெண், திருமணம் ஆகும் வரை, தம் ஸ்ரீ மாதா! ஸ்ரீ பிதாவை! தினமும் அதிகாலையும்! இரவு படுக்கும் முன்னும் நமஸ்காரம் செய்ய வேண்டும்.

(3) திருமணம் ஆன பெண்கள், ஸ்ரீமாதா! ஸ்ரீ பிதா! நமஸ்காரம் வேண்டாம். தன் ஸ்ரீ பதியான பாதங்களில் அதிகாலையும்! இரவு படுக்கும் முன்பும்! அவசியம் நமஸ்காரம் செய்ய வேண்டும்!

(4) திருமணம் ஆன பெண்கள், கணவன் வார்த்தையை எதிர்த்து வார்த்தையோ! மறுப்பு வார்த்தையோ! **கடும்! சுடும்!** வார்த்தையோ கண்டிப்பாக பேசக்கூடாது. உங்கள் வார்த்தையே, குடும்பத்தை நிர்மூலமாக்கும்.



### 7

மனைவி மக்கள், குடும்பம், பொன், பொருள் இவைகளை விடச் சொல்லவில்லை. அவை என்னுடையது என்ற மனமமதையை நான் விட எண்ணுகிறேன். எல்லாம் நீயே! என்றால் உன் கதை முடிந்து விடும்.

5 திருமணம் ஆன பெண்கள், கணவன் வார்த்தையை! மட்டும் மீறக்கூடாது! அங்கு ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! வாக்கை கேட்கத் தேவையில்லை! இங்கு கணவன் வாக்கை மீறி! ஸ்ரீமாதா ஸ்ரீபிதா வாக்கை! கேட்டால் [?] அது பாபமானது [?] ஸ்ரீபதித்துரோகம் ஆகும். இது பாவமானது உண்மை. ஆனால் ஸ்ரீமாதா! ஸ்ரீ பிதாவுக்கு! கற்புநெறியில், உபகாரம்! மதிப்பு! மரியாதை! அவசியம் கொடுக்க வேண்டும்! அலட்சியம் கூடாது!

6 திருமணம் ஆன பெண்கள், கணவனுக்கும்! தம் குழந்தைகளுக்கும்! எப்பலனும்! எதிர் பார்க்காமல், சேவை செய்வதே பெரும்பாக்கியமாக கருத வேண்டும்! இச் சேவையைஸ் எவ்வாறுவகும் [?] எவ்வாறாகும் [?], ஒரு பெண் பெற முடியும். இது சத்தியம்!



(8) ஆடம்பரமே
ஆழ் கொல்லி
வியாதியாகும்!
விளம்பரமே மரணப்
படுகுழியாகும்!
வியாபாரம் என்ற எதிர்
பார்ப்பும்! வேண்டாம்!
மாற்றத்தால் ஏமாற்றமும்; ஏமாற்றத்தால்
தடுமாற்றமும் உண்டுபண்ணி விளையாடுகிறேன்!

(7) திருமணம் ஆனாலும்! திருமணம் ஆகவில்லையானாலும்! ஓர் ஆண்மகனுக்கு, ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! கண்கண்ட! நடமாடும்! பேசும்! தேவையைப் பூர்த்தி செய்யும்! **தெய்வம்** ஆகும்!

**10** வயதுக்கு மேல், ஒருவன் ஆண்மகன் ஆகிறான்

(8) அந்த ஆண்மகனுக்கு, அவனுடைய ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! இருவருக்கும், அந்திமகாலம் வரை உணவு! உடை! இருப்பிடம்! இம்மூன்றும், எந்த **குறையும்** இல்லாமல், கொடுக்கவே ஆக வேண்டும். இதைச் செய்தால் அந்த ஆண்மகன் **இங்கும்** (பூலோகம்)! **அங்கும்** (தெய்வலோகம்)! **சுகம்** தன்னின் (இன்பம்) அனுபவிப்பான்.

துன்பங்களுக்கு, இவனே காரணம் ஆகிறான். இங்கு ஸ்ரீ பகவானோ! ஸ்ரீ ஜெகந்நாதனோ! பொறுப்பல்ல! இவன் ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! **சேவையே** இவன் பலமாகவும்! பலனாகவும்! அமையும்.



ஸ்ரீ மாதா! ஸ்ரீ பிதா! கணவன்! இந்த (9)
ஒருவருடைய வார்த்தைகள்
ஆன்மீகம் என்ற நெய்யில்
சுத்திகரித்து எதிர்மறை
யாக இருந்தால் அந்த
வார்த்தையை மீறலாம்
அடுத்தபக்கம் தொடரும்!

இவன் தம்முடைய, ஸ்ரீ மாதா, ஸ்ரீ பிதாவை! கவனியாமல்
விட்டதற்கோ! பிறவகற்கோ! இவன்
மனைவியோ! குழந்தைகளோ! பொறுப்பாகாது!
இவனே பொறுப்பாவான்! கவனம் தேவை.

(9) திருமணம் ஆனவன், தன் மனைவியை!
சேவையின்/ஓர் அங்கமாக கருத வேண்டுமே
யன்றி, ஓர் போகப் பொருளாக, கருதக்
கூடாது. அப்படி கருதினால், அவனுக்கு தோஷம் ஜன்மா
உண்டு என, நீதி சாஸ்திரங்கள் சொல்கின்றன.

(10) திருமணம் ஆனவனுக்கு, அவன் மனைவி! அவன்
பந்தாய் இருப்பின்/அவனுக்கு தாய் ஸ்தானம்
பெறுகிறாள். தாய்க்குப் பின் தாரமே மறு தாய்
அவதாரமாவாள்!
அங்கு, அவன் மனைவி, பொறுமையின்
பூமிமாதா என இருக்க வேண்டும். ஆகவே,
ஸ்ரீ மஹான்கள், தம் அனுபவத்தில், கூறியும் போது!
பொறுமை என்றால் பெண்/பெண்ணென்றால் பொறுமை!
என்றார்கள்.



(10) அங்கு ஒத்து வரக்கூடிய ஓர் **பொய்யை** சொன்னாலும் தோஷமும் இல்லை. அது பாபமும் இல்லை. அது துரோகமும் இல்லை. அதுவே உகந்த தர்மமாக மாறும்! என ஸ்ரீ மஹான்கள் சொல்வர் முடிந்தவரை.

(11) **கணவன்** செய்த, அனைத்து ஸத்காரிய தர்மங்களும்! எந்த தடையுமின்றி, அவனுடைய **மனைவிக்கு! பாதி** சேர்ந்துவிடுவதாகும்! மனைவியின் பாபம்! பாதி! அவள் கணவனுக்கு சேர்ந்து, மனைவியின் புண்ணியம், முழுமையுமே, அவளுக்கேயன்றி கணவனுக்கு, அணுவும் சேராதிருப்பதாலும்! **பெண்கள்** பாக்கியவதிகளே!

(12) கணவனை மனைவியோ! மனைவியை கணவனோ! இவ்விருவரும் தம், குழந்தைகளையோ! **எந்த கண்ணோட்டத்துடன்! சந்தேகம்!** கொண்டு, பார்ப்பதோ! அதுபற்றி பேசுவதோ! இருந்தால் அது அப்படியே, பலிதமாகி, மிகுந்த **பய துக்கத்தை** கொடுக்கும் என, ஸ்ரீ மஹான்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம்



ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! (11)
இவர்களின் மனம் நோகப்
பண்ணிய ஆண்மகனுக்கு

ஏழு ஜென்மா உண்டு

இது பிரமாண உண்மையாகும்
இவன்களை இக்காலத்தில்
பெரும் அவதியுறுவான். தொடரும்.

சந்தேகம் கொண்டவர் **வைராக்கியம்!**
அவர் கொடிய, **அரக்கராவர்**
இது சத்தியம்.

(12) கணவன் யாரை, தவறாக தோற்றினாலும்;
மனைவியாரை, தவறாக தோற்றினாலும். அந்த
**நரகு** உன் உள்ளத்தின் உள்ளே! உன்னுள்
விளைந்த **உன் நரகம்** என்றுணர்.
அங்கு அவரிடமில்லை
இதற்கு, மாற்று மருந்து:- ஸ்ரீபகவானையோ! உன்
ஸ்ரீகுருதேவரையோ! வேண்டி, அழுது, முறையிடுவதே,
இதற்கு மருந்தாகும். வேறெதுவும் பலன்தராது!
உன் கண்ணீரே! அச்சந்தேகத்தை, கழுவி நாசம்
செய்யும்!
குற்றம் பார்க்கின் (இறை) சுற்றம் இல்லை! என்றார்
எம் ஔவை மூதாட்டி! இதன் உட்கருத்து! குற்றம் தொ
தோற்றிடில் அங்கு இறைவன்! தோன்ற மாட்டான்!
தோன்ற முடியாது! தோன்ற இயலாது!



ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! (12)
இருவரையும்
போற்றி சேவை செய்
பவன் அவன் சந்ததி
யும்! அவன் பிறவியும்
புனிதம் அடைந்து
நிலை கொண்டு பதமுக்தியும்
பரமுக்தியும் பெறுமையும் என்பது சத்தியம்.
முடிந்தது.

(14)

மனைவி என்றால் அது அடிமையும் அல்ல! போகம் பொருளும் அல்ல! தேவையின் பொருள் என்றும் இதன் உண்மை!

பெண் என்றால்; சக்தி! ஆண் என்றால்; சிவம்!

சிவம் செயலற்றது! சக்தி செயலுற்றதாலே!

ஆகவே, சிவம் இல்லையேல் சக்தி இல்லவே இல்லை! ஆனால் சக்தி இல்லையேல், சிவம் உண்டு! ஆனால்?
சிவம் செயலற்ற தன்மையால், சிவத்தை, சவம் என்று சொல்வதும் பொருந்தும்!

இதனை நீ உணர்வதாலே:- சக்தியின்

உன்மனைவியின் அன்பு வழி இருந்தால் தான், உன் அறியாமையின் கர்மா முழுவதும்! தொடராது!

ஆகவே உன் மனைவியை, தவறாகவும்! தரக்குறைவாகவும்! தரம் தாழ்த்தியும்! எண்ணாதே! பேசாதே! அது அபசாரம் ஆகும்!



13

கணவன் மனைவியை யோ
மனைவி கணவனையோ!
இவ்விருவரும் தம்
குழந்தைகளையோ!
**அபத்தமாக**
(எ.வார்த்தைகளால்)
திட்டினால் அதுவே சாபமாக முடியும்.
தொடரும்.

15 **மனைவியிடம்** சேவை செய்யும்!

நீங்கள்
கட்டுப்பட்டதைப் போல்
விட்டுக்கொடுத்தைப் போல் ஓர் **பாவனை!**

செய்து! செய்து! செய்து! செய்து! செய்து! பார்
(இந்த வைத்தியம்)
**சுதந்திரப் பறவை** என ஆவீர்!

உன் மனைவியை, உன்னுடைய (அம்பாளாக அன்னையாக) எண்ணுவாயாக.
நலம் பெறுவாய்.

16 **பயம்! சலனம்! சந்தேகம்!**

சின்ன சின்ன ஆசைகள்! அவை படிப்படியாக விரிவடைந்து
அவை இரண்டுபட்ட நிலையில், பெரும் குழப்பம்!

இம் மூன்றும், ஆணோ! பெண்ணோ! எவரிடம் இருந்தாலும்
அவர் பெண்ணோ! அவர் பாவம் அதிகம் புரிந்தவரே!

ஆகவே இந்த மூன்றும், அணுகாமல் ஒருவன்
தூய்மை சக்தியுடன் இருந்தால், அவன் உயர்ந்த
**பக்தியும்** அடைவான்! உணர்ந்த ஆத்ம **ஞானமும்**
அவசியம் அடைவான் என்பது சத்தியமே!



14

இவர்கள் பின்
ஏவி கஷ்டப்
படும் போது இது
நம் வாக்குக்கான்
நம்மை இப்படி பாடாய்
படுத்துகிறதென
உணர முடியாமல்
கடும் துன்பத்தை அனு
பவிப்பார். இது யார் செய்த வினையுமல்ல.
உனக்கு நீயே உன் வாக்கால் செய்த வினை
யாவும் முடிந்தது.

எம் ஆத்மானந்த குழந்தைகளே! இதில் கூறிய 16 வாக்கியமும், இல்லற தர்மத்திற்கு! உரியதாகும்!

கணவன் கல் நெஞ்சனாக இருந்தாலும்! உதவாத புல்லுருவியாய் இருந்தாலும்! கொடும் கோபக் கொள்ளிக்காரனாக இருந்தாலும்! **உன் விதி** வசத்தால் **கணவனாக** அமைந்து விட்டாலும்! கவலை பயமோ துக்கமோ வேண்டாம். அந்த வேளையிலும், உன் வினையை களைந்து, உன்னை புனிதப்படுத்த வந்த ஸ்ரீ பகவானையே, **நம்பு**! உன் நம்பிக்கை, வீண் போகாது. உன் விதி வசம் அப்படி அமைந்திருக்கிறது என பொறுமையுடன், ஸ்ரீ பதி சேவையை மட்டும் செய்து வா! **அவன் பார்த்துப்பான்**! இங்கு உன் பொறுமையும்! நம்பிக்கையும் தான், ஸ்ரீ பகவான் ஆகும். நவமே! நவமே! நவமே! என எண்ணுற பலம் பெறுவாய்.



சர்வார்ப்பணத்
தால் மனமுருகி (15)
ஏக்கமும்! உருக்கமும்!
கண்ணீர் பெருக்கமும்!
கொண்டு நீ செய்யும்
பிரார்த்தனையானது,
அவனை நெருங்கும்! உன்
வினையை கரைக்கும்!
வேறு எந்த மாற்று உபாயமும் இல்லையென்பது
ஸத்தியம்.

எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே!
என்ற, சர்வார்ப்பணமும்! தெளிவு கூறிய, இல்லற
தர்மத்தையும்! அழுத கண்ணீரும்!
தொழுத கரங்களுடன்! உன் சரணாகதியை நீ
செய்யும் போது! வினையின்! கொடுமை! கருமை!
உன் அனுபவ நிலைக்கேற்ப வரும்!
மலை பார அழுக்கும்! சூரியனைக் கண்ட பனி போல்,
விலகும்! இந்நாளில் உன் குரு தேவர் அருளும்,
அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அதுவே எல்லாம்!
ஜகம், பரமும், ஜீவர்களும்! சிவமும் இல்லை! என்ற
பிரம்மார்ப்பணம்! அவனியம் பலம்! பவனி தரும்!
மன அழுக்கும்! வினையின் கருமையும்! வேசாகாமல்,
அதுவே நாம்! நாமே அது! என்ற அத்வைத ஞானம்
நிலைக்காது. அது வாய் ஞானமாகவே இருக்கும்.
ஆகவே முயற்சி உங்களுடையது! பலன் எம்முடையது!
அழகாய் எல்லாம் ஒன்றே!
உன்னை பெறுவாம். அது இயலுமே! அது யாவும்
எம்மையும் பெறுவாம்.
பாபா.



(ஸத்தியவாக்கை) 1

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்!
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!

"ஸத்குரு திருவடி துணை"! "நம்பினார் கெடுவதில்லை"!

"தெய்வம் மனுஷ்யாணாம்"! "யத் பாவம் தத் பவதி"!

இக்கலியில் தெய்வம், நேரில் வராது. வரக்கூடாது. வரஇயலாது. காரணம், ஒவ்வொருவரிடமும் தர்மம், மறைந்து கிடக்கிறது. அத்தர்மம் என்று பிரகாசிக்கிறதோ, அக்ஷணம் தெய்வம் நேரில் வரும். இது ஸத்தியம். அதுகால மாயினும், தெய்வம் மனித வடிவில் அவசியம் வரும்.

உன்னை எது எதுவாக, பாவனை செய்கிறாயோ, அது அதுவாக நீ ஆவாய். இது ஸத்தியம்! சாமான்ய ஜீவனாக, பாவனை செய்தால் நீ ஜீவனே! உன்னை ஸ்ரீபகவானாக பாவனை செய்தால் நீயே ஸ்ரீபகவான்! உன்னை பரமாக, பாவனை செய்தால் நீயே பரசொரூபமாவாய்! இது ஸத்தியம்

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம்,

ஓம்

அகம்பிரம்மம், ஜகம்பிரம்மம்;
அகமே எல்லாம்!
ஜகம், பரமும், ஜீவர்களும்
சிறிதும் இல்லை!!



**கடன்** வாங்கி(2)
**கடன்** கொடுத்த
வனும் கெடுவான்.
**மரம் ஏறுகை**
விட்டவனும் கெடுவான்.

வாழ்வை அறவோம்! ஆடம்பரம் இல்லாமல்!
தொடரும்.

# திரு ஆலவாய் இல்லற தர்மம்!!!

அன்பர்களுக்கு!

(இதழ் இரண்டு)

## (1) பின் தூங்கி முன் எழுவாள் பத்தினி!!!

**பதிபரமேஸ்வரா!** என ஸ்ரீபதிபக்தியோடு இருக்கும் பதிவிரதையான, பெண்கள் பதிசேவையே **பரமாத்மசேவை** யென செய்து வந்தால், வேறு, ஆலயதரிசனமோ! பூஜை, அபிஷேக, ஆராதனை, இவை, எதையும், தனியாக செய்ய வேண்டாம்! என, ஸ்ரீஅனுபவ மஹான்கள் சொல்வர். இவர்களுக்கு, இவர்கள் ஸ்ரீபதிசேவையும்! தம் குழந்தைகள் சேவையும்! புகுந்த வீட்டின் மாமன் மாமி! சேவையும்! இவர்களுக்கு, எல்லா தர்மங்களையும், வாரி வழங்குமென **விதுர நீதி** சொல்வதாக ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.



# கடன் ③


கூடுமான வரை வாங்காமல் சிக்கனமாக இரு. ஆனால் கருமியாக இராதே!

இறை குரு உணர்வில் சர்வார்ப்பணமாக இருந்தால் வாழ்வும் சீராக அமையும். கடன் தொல்லையிலிருந்தும் விடுபடலாம். முற்றும்.

இந்த தர்மத்தின் பெண்கள், முன் சொன்ன, தர்மத்தின் படி, ஸ்ரீபதியின் திருவடியில், அதிகாலையும், இரவு படுக்கும் முன்பும், நமஸ்காரம் செய்ய வேண்டும். அப்படி நமஸ்காரம் செய்யும் போது, முன் இதழில் சொன்னபடி, **சர்வார்ப்பணம்** அவசியம் செய்ய வேண்டும்.

② உண்மையான குல ஸ்திரீயானவள்:— Ⓐ கணவன் (படுத்தபின்) தூங்கியபின் (சேவைகளை முடித்துவிட்டு) தான் தூங்க வேண்டும்! Ⓑ கணவன் எழும்பும் முன், (அதிகாலை **4 To 4-30**க்குள்) தான்! எழ வேண்டும்.

Ⓒ எக்காரணம் கொண்டும்! எந்நிலையிலும்! எவ்வித எச் சோதனை காலங்களிலும்! தம் குழந்தைகளையும்! தம் கணவனையும்! வீட்டின் பெரியவர்களையும்! **கடும்! சுடும்! கபட** (கேலி) **சொல்** சொல்லவாகாது. (திட்டவாகாது) அதுவே **பத்தினிசாபம்!** ஆகும். அது அப்படியே பலிதமாகும்! உங்கள் வீட்டில் கஷ்ட, நஷ்ட, துன்ப துயரங்களுக்கு உங்கள் **வாக்கே** காரணமாக அமைகிறது. இது வேறு எவர் சாபமும் இல்லை. நீங்கள் பேசுவதும் உங்களுக்கு தெரியவில்லை. பின் விளைவும் தெரியவில்லை.



(4) ஒருவர் செய்யும் தீமையை எண்ணி எண்ணி மனம் புழுங்குவது

# வஞ்சனம்

(வஞ்சகம்) ஆகும். இப்பதிவேடு, கடும் தண்டனையைத்தான் உனக்குத்தான் கொடுக்கும். இதை மறப்பது, அதி கடினம் தான்.

ஸ்ரீ பகவானிடம் மனம் வருந்தி முறையிட்டால், அவசியம் மறக்க முடியும். வினையும் உன்னை பற்றாது.

(3) இதைத்தான் எம் வள்ளுவன் சொன்னான்:—
தெய்வம் தொழாள் (தொழ வேண்டாம்) கொழுநற் (தம் கணவன்) தொழுது எழுவாள் — பெய்யெனப் பெய்யும் மழை! என்றான்.
ஓம் அன்னையர்களே! நீங்கள், மழையைப் பெய்ய வைக்க வேண்டாம். உங்கள் குடும்பங்களை, தர்மம் தவறாமல், வாழ வைத்தால் போதும். (கணவனை வணங்கினால் போதும்! அது அனைத்து தேவ தெய்வங்களையும், வணங்கியும்! வழிபட்டதும் ஆகும்)

(4) இன்னா செய்தாரை (துன்பம் செய்தவர்களை) ஒறுத்தல் (தண்டித்தல்) அவர் நாண (அவர் வெட்கப்படும் நிலைக்கு) நன்னயம் (நல்ல காரியம்) செய்து விடல்! என்றான் எம் வள்ளுவன்.
ஓம் ஸ்ரீ மாதா ஸ்ரீ பிதாக்களே! ஒருவர் (உங்களுக்கு) ஓர் தீமையை, அறிந்தோ, அறியாமலோ உங்களுக்குச் செய்தால், அவர்கள் வெட்கப்படும் நிலைக்கு அவர்களுக்கு ஓர் நன்மையைச் செய்! என்றான் வள்ளுவன்.

நீங்கள் நன்மை செய்ய இயலாவிட்டாலும், அத்தீமையை

**மற! மன்னித்துவிடு! விட்டொழி**

அவசியம் பக்தியும் வளரும்! ஞானமும் உண்டு.



(5) இனம்! மதம்! மொழி!
பெரியவன்! சிறியவன்!
இப் பேதம் வேண்டாம்
எல்லோரிலும் ஸ்ரீபகவான்
உள்ளான். ஆகவே கேட்ட
மாத்திரத்தில்! பார்த்த
மாத்திரத்தில்! ஆத்திர
அவசரம் கொள்ளாதே. சற்று
பொறுமையுடன் இறைகுரு உணர்வுடன் காத்து
இருந்தால் அதன் உண்மை அவசியம் உணர்வாய்.

(5) தன்னைக் காக்கின், சினம் காக்க - காவாக்கால்,
தன்னையே கொல்லும் (அச்) சினம்!
என்றான் எம் வள்ளுவன். அதாவது, உன்னை நீ
பாதுகாக்க வேணும் என்றால், உன்னிடம் கோபம்


**(விரோதம் & குரோதம்)**

வராமல், உன்னை கட்டிக்காத்துக் கொள். அதையும்
மீறி, கோபம் உன்னிடம், பொங்கி வந்தால்,
அக்கோபம்! **அவனை** அழிக்காது!
**உன்னையே** அழிக்கும்!!
"**தன்வினை தன்னை சுடும்**"
உனக்கு நீயே எதிரி! உனக்கு நீயே நண்பன்.

(பிறர் வினை உன்னைக் கெடாது)

(6) எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது **அறிவு**!
என்றான்; எம் வள்ளுவன்.

படித்தவனோ/படிக்காதவனோ! பக்தனோ! பாமரனோ! குழந்தையோ!
பெரியவனோ! ஆணோ! பெண்ணோ! எவர் எதைச் சொன்னாலும்
சற்று பொறுமையாயிருந்து (இறைகுரு உணர்வுடன்)
சிந்தித்தால், எந்த வார்த்தையும், உயர்ந்த கருத்தைத்
தான் கொடுக்கும். எல்லோரும் நல்லவர்களே என உணர
முடியும்! அதுவே அறிவு ஆகும்!



எம் ஆனந்த குழந்தைகளே! (6)
நீங்கள் குடும்பம்/
உறவு/சுற்றம்/நட்பு/
தொழில்/பணம்/போக்கு
வரவு/கொடுக்கல் வாங்கல்/
லாப நஷ்டம் இவைகளால்
மனம் பாதிப்பு அடையாமல்
இருந்தால் இந்த தர்மம்
ஏந்த வேண்டாம். சுத்த
அத்வைதத்திலேயே நிலை பெற்று நிற்கலாம். மனம்
பாதிப்பு அடைபவர்களுக்கும்
இந்த தர்மத்தை தெரிந்தும்

(7)

ஓர் முக்கியம்:— ஓர் குடும்பத்தில், அம்மாவும்/ அப்பாவும்/ இருக்கும் போதோ! அல்லது அவ்விருவரில், ஒருவர் இருக்கும் போதோ! (ஆண் மகன்)

குடும்ப சொத்தை, பிரிப்பது என்றால் ?????

(A) தாய் தந்தை/அனுமதியுடன் (அவர்கள் வாயார வாழ்த்தி) தான், பிரிக்க வேண்டும்.

(B) அவர்கள், அனுமதி இல்லாமல். பிரித்தால், பிரித்தாலும், அவன் சொத்து, நிலை பெறாது (கடும் துன்பம் விளையும்)

(C) அவர்களை விரட்டிவிட்டு, தான் அச்சொத்தை அனுபவித்தால், அவன் கடைசிகாலத்தில், உணவு/ உடை/ இருப்பிடம்/இன்றி தட்டழிவான்!

(D) பங்கு போடுபவர், எத்தனை பேர் இருந்தாலும்,

# அடாவடியாக (அதிகாரத்தினால்)

அணுப்பிரமாணம் அதிகமாக ஏற்றுக் கொண்டாலும், அவன் அச்சொத்தின் **பாபத்தை** தானே, வலிய ஏற்றுக் கொள்கிறான். இப்படி இது வரிசைக் கிரமமாக அமையும்.



(7)

பெண் மோகம்
போதையும்!
சூதாட்டமும்!
குடிப் பழக்கமும்!
இம் மூன்றும் கலி
தோஷ குணங்கள் ஆகும்! இதில் ஓர் ஆண்மகன் சிக்காமல் இருந்தால் அவனே மனிதன். அவன் தேவனாய் ஆகவாம்

(E) எவன் எதையும், விரும்பி கேட்காமல், கடைசியில் மிஞ்சியதை பொறுமையுடன், பெறுகிறானோ! அவன் பாக்கியவான்! அவன் புண்ணியவான்! அவனுக்கு தர்மத்தின் வழியில், ஏற்காலத்தில், அவனுக்கு தேவையானதும்! அமைதியும்! ஆனந்தமும்! நிறைந்த ஐஸ்வர (தெய்வீகம்) வாழ்வு உண்டு!

(8) ஓர் ஆண்மகன், தன் மனைவியை, சேவையின் பொருளாக கருதவேண்டும். தன் மனைவியை, கையாலோ காலாலோ, அடிப்பவன்! எருது (எருமை) ஜன்மா உண்டென, மனு நீதி சொல்கிறது. கணவனுக்கு, மனைவியும்! மனைவிக்கு கணவனும்! எண்ணம், சொல், செயலால்! ஒருவருக்கு ஒருவர், சேவை மனப்பான்மை கொண்டு, அன்புடன் வாழ்ந்தால், அக்குடும்பம், ஓர் கோவிலாகவே மாறிவிடும்.

ஓர் ஆண்மகன் மது/ மாது/ சூது/ என குடி போதை! விபசாரம்! சூதாட்டம்! இச்சி! தீயபழக்கம்! தீயபழக்கம் இருந்தால் அவன் மனிதன் அல்ல! அவன் அசுரன் ஆவான்.



(8) இதில் கூறியபடி, தர்மத்தை கடைப்பிடித்து, நடக்க வேண்டியது உன் பணியாகும். அந்த தர்மமானது, உன்னையும், உன் குடும்பத்தையும், கண்ணை இமை காப்பது போல் காப்பாற்ற வேண்டியது அந்த தர்மத்தின் பணியாகும்.

(9) ஒரு ஆண்மகன், சுயமாக வேலை செய்து, சம்பாத்தியம் பெறும் வரை, தம் **தந்தையின்** பணத்தில், (சொத்தில்) படிப்போ, வேலை தேடுவதோ, மற்றும் உணவு, உடை, இதர செலவு செய்யலாம்.

அந்த ஆண்மகன், உழைத்து, ஊதியம் பெற்றுவிட்டால்,

(A) நான் தேடிய பணத்தில் இருந்து, அவன் ஸ்ரீமானுக்கு, ஸ்ரீமதாவுக்கு, ஓர் சிறிய தொகையாவது, கொடுக்க வேண்டும்.

(B) மூதாதையர் சொத்திலோ, தம் தந்தை பணத்திலோ,

# கை வைக்கலாகாது!

(அது மஹாபாபமாகும்) அப்படி, அதையும் மீறி அவன், செய்வானாகில், அவன் பங்காளத்திற்கு துன்பம் அனுபவிக்க வேண்டிவரும். அத்துன்பத்திற்கு, அவனே பொறுப்பு. வேறு எவரும் பொறுப்பல்ல.

(C) ஊதியம் பற்றாத விஷயமானால், அவனையும் அவன் குடும்பத்தையும், அவனே பாதுகாக்க வேண்டும். அங்கு அவன் தந்தையிடம், பணம் வாங்க கூடாது!

**கடன்** படா, வாழ்வே **திடன்** பெறும்!

இதுவும் ஔவையின் மூதுரை!



(9)

ஸ்ரீ பகவன் நாம துணையுடன், அவன் செயல்படும் போது, அவன் குடும்பத்தை ஸ்ரீ பகவான் அவஸ்யம் காப்பாற்றியே ஆகவேண்டும். இது நியதி. தர்மத்தை நீ காப்பாற்றினால், அத்தர்மம், உன்னைக் காப்பாற்றும். தர்மத்தை நீ விட்டுவிட்டால், அந்த தர்மம், உன்னை கைவிட்டு விடும்.

D) தன் உத்தியத்தில், தன் ஸ்ரீமாதா, ஸ்ரீ பிதாவுக்கு, தம்மாலியன்றதை, கொடுத்து போஷித்தானைல், அவன் குடும்பத்தை, ஸ்ரீ பகவான் போஷிப்பான்!!!

E) ஸ்ரீமாதா, ஸ்ரீ பிதா! பாட்டன், பாட்டி, ஆகிய இவர்கள், ஓர் ஆலமரத்தார் போன்றவர்கள். அங்கு நீயும், உன் குடும்பமும், அம்மர விழுது போன்றவர்கள்.

அடி மரம், தண்ணீர், உரம், ஏற்றுக்கொண்டால், விழுது பயனும் பெறும், பலமும் பெறும்.

எம் மெய்அன்பர்கள், இங்கு ஒரு கேள்வி கேட்கலாம்? இவர் ஆழ்ந்த பக்தி, உணர்ந்த ஞானம், ஆத்மஞானம் போதிக்க வந்தவர்களே? குடும்பத்தைப் பற்றியும், தொழிலைப் பற்றியும், பணவரவு செலவைப் பற்றியும், முழுமையாக லௌகீக போதனையை, ஏன் இப்படி விளக்கமாகவும், அதி நுட்பமாகவும், ஆழ்ந்த கருத்துடனும், சொல்லும் காரணம் என்ன? உலகம் பொய், உறவு பொய், நாமரூபம் பொய், என அனுபவம் பெற்றவர்க்கு, இது எப்படி இவரிடம் வரலாம்? அப்படியானால், இவரிடம் இருப்பது, வாய்ஞானம்தானோ? என பலபல கேள்வி, கேட்கத்தோன்றும்?



மனோ பாரத்தாலும்! (10)
உடல் சிரமத்தாலும்!
உபாதைப்பட்டுக் கொண்டு
ஆன்ம சாதனை செய்ய
இயலாதுதானே. ஆகவே
இல்லற தர்மத்தை!
நன்று சிரத்தையுடன், நெறியுடன்
கொண்டீர்களாயின்? தொடரும்.

ஓ எம் அன்பான குழந்தைகளே! அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் பல பல ஜன்மங்களில், தேடிய உங்கள், **புண்ணியபாபம்!** உங்கள் அனைவரையும், தொடர்ந்து பிடித்திருக்கிறது. இவைகள், உங்கள் குடும்பம்! தொழில்! போக்குவரவு! கொடுக்கல் வாங்கல்! இவைகளின் **லபந்தம்** என, அனுபவித்துக் கொண்டு **மனோ** பாரத்தையும்! **உடல்** (வறுமை & பிணி) சிரமத்தையும்! அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்களே! இவைகள் எப்படி வந்தது என, விபரம் தெரியாமல், சிரமப்படுவதை யாம் உணர்கிறோம்! உங்கள் மனோ பாரங்களுக்கும், உடல் சிரமங்களுக்கும், **நீங்களே** பொறுப்பு என உணராமல்! யாரோ, நமக்கு, வேண்டியவர்களோ! வேண்டாதவர்களோ! ஏதோ (செய்வினை) செய்திருக்கிறார்கள் என்றோ? அல்லது, தெய்வம் நம்மை, ரொம்ப சோதிக்கிறது என்றோ? **பழிபாவத்தை** பிறர்மீது போட்டு;



இ மனோ பாரம் (11)

குறையும் அகால் உடல் ரோகமும், (வறுமை & பிணி) வரவர குறையும். அந்நிலையில், அதுவே நாம்! நாமே அது! என்ற அத்வைதமும், உங்கள் மனம் மனோஸ்தானமும். மனம் ஒன்றும். உங்கள் மனம் ஆகவே இவன் முக்தியும் அடைவீர். முற்றும்.

வோட்டு, எழுதிவிட்டீர்கள்! அது உங்கள் **குறை** என உங்களுக்கே தெரியவில்லை. அதன் காரணம்?

உங்கள் **பழக்க! வழக்க!** தோஷம், (பேச்சு சுவாரஸ்யம்! செய்கையின் மோகம்!)

உங்கள் அனைவரையும், இந்த பாடுபடுத்தி விட்டது. ஆகவே உங்களுக்கு இல்லற தர்மத்தை இனிமேலும் போதிக்கிறோம். இது உங்களுக்கு சாந்தியை அவசியம் கொடுக்கும்!

நடந்ததை எண்ணுபவன் **ஏமாளி** யாவான்!

நடந்து முடிந்தது, அனைத்தும், நிகழ்ந்து முடிந்த எல்லாவற்றையும் நடந்ததை எண்ணிப் பார்க்காதீர்!

நடக்கப் போவதை; என்ன ஆகுமோ? ஏது ஆகுமோ? என **வீண்கற்பனை** பண்ண வேண்டாம் என்று உங்கள் அனைவரின், பாதம் பற்றி வேண்டுகிறேன்.

**நடப்பதை** இறை குரு உணர்வோடு **நலம்! நலம்! நலம்!** என அமைதி கொள்ளவும் நலம் பெறுவீர்.

இல்லற தர்மம்! இத்துடன் இரண்டு இருக்கிறது, இதனுடன் ஒன்றுக் கொண்டு வாழ்வில் அனுபவிக்கவும். உங்களால் முடியும்! முடியாதது இல்லைத்தியும் புவம் யாது. எல்லாம் ஒன்றே அது இவனே!

**பாபா.**


அது யாவும்! யாவே அது! அதுவே நீங்கள் இது சத்தியம்!



ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! (12)
மற்றும் பெரியவர்கள்
அடிமரம் ஆகும். நீங்கள்
அதன் விழுதுகள் ஆகும்.
ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! மற்றும்
பெரியவர்களை போஷித்தால்
உங்கள் வாழ்வு
செழிக்கும். ஸ்ரீபகவான் உங்களைச் செம்புத்தை
நடத்திப்பான் இது சத்தியம்.

# கொடுமை!

கொடுமை என்பது, உணர்ந்து நோக்கினால்,
வறுமை தான், கொடுமை என்றார்கள்.
அதுவும் இளமையில்! வறுமையில்
அகப்படுவதையே, கொடுமை என்றார்கள்.
அதனினும் கொடுமை! தொழுநோய் என்றார்கள்.
அதனினும் கொடுமை! அன்பு இல்லாத,
பெண் என்றார்கள். அதனினும் கொடுமை!
அந்த பெண் கையால், ஒருபிடி
உணவு! ஏற்றல் என்றார்கள். இதனை நாம்
உணர்வது, அன்பு இல்லாத உள்ளமும்
அப்படிப்பட்டவர், ஞானி ஆயினும், அவர் கைகளால்,
எதையும் ஏற்க வேண்டாம் என்றும், அப்படி
ஏற்பது மஹா பாபம்! என்றும் ஸ்ரீமஹான்கள் சொல்வர்



கண் போன்றவன் (13)
கணவன் ஆகும்.
ஆகவே கணவன் வாக்குக்கு கட்டுப்படுவது
கண்ணன் வாக்குக்கு
கட்டுப்படுவது போன்று,
ஓ பெண்பாவாய்! உன்
கணவன் உடலை பார்க்காதே
உள் இருக்கும் ஸ்ரீபரமாத்மாவை உணர்.
அவனே உன் கணவன் என
உணர்ந்தால் அவஸ்யம் நீ அடங்கி நடப்பாய்.

இதை எம் ஔவை மூதாட்டி! சொல்லும் போது?

பர்த்தாவுக்கேற்ற **பதிவிரதை**
உண்டானால்; எக்காலமும் (முக்காலமும்)
கூடி வாழலாம்.
சற்றேனும், ஏறுக்கு மாறாக நடப்பாளாகில்!
கூறாமல் **சந்நியாசம்** (துறவறம்)
கொள்! என்றார்; அழுத்தம் திருத்தமாக.

இதன் உட் பொருளை உணர்க!

இப்பாடல் சுமார் **600** வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஆகும். இதன் உட் பொருள் என்னவென்றால் **கணவன் வாக்கை மீறாதே!** என்பது தான் பொருள். கணவன் என்றால், கண் + அவன் = கணவன்! அதாவது **கண்ணன்** போன்றவன் கணவன் என, ஸ்ரீ மஹான்கள் கூறக் கேள்விப்படுகிறோம்.



அன்பு தாய் போன்றவள். (14)
உன் தாரம் என்னும்,
மனைவியாகும்.
ஆகவே உன் மனைவியிடம்
அதிகாரம்! ஆதிக்கம்!
செலுத்தாதே! அப்படி
செலுத்தினால், அவள்
உள் உள்ள ஸ்ரீ அம்
பாளையே, அதிகார ஆதிக்
கம் செலுத்தியதாகும். அப்படி செய்தால்,
உனக்கு, வாழ்க்கையும்! சாதனையும்! இல்லை.
கவனம் தேவை

# ஆணும் சிவ என்ற சக்தியும்

சாமான்யன் அல்ல! என்பதும் பேருண்மையாகும்.
ஆணை சிவன் ஆகவும்! பெண்ணை சக்தியாகவும் சொல்வர்.
சிவன் என்றால் எலும்பு! என்றும், சக்தி என்றால்
சதைப் பற்று! என்றும் சொல்வர். எலும்பு இயங்காது!
சதைப்பற்றே இயங்கும்! எலும்பு இல்லையேல், சதைப்
பற்று நடக்க பெறாது. ஆகவே தான், சக்தி இல்லையேல்,
சிவன் இல்லை என்றும். சிவன் இல்லையேல், சக்தி இல்லை
என்றும். ஸ்ரீ மகான்கள் சொல்வர்.
ஒன்றை ஒன்று பகைக்கவாகாது! வேற்றுமைப் படுத்த
வாகாது! ஒதுக்கித் தள்ளவாகாது. இரண்டும்
**இணைந்தால்** இரண்டும் இரண்டு கண்கள் ஆகும். மட்டுமே அது சாதகம் இரண்டும் ஒன்றுக்கொன்று
முற்றும் பெறும்! சோதனை தோற்றது! **பெண்ணை**
**உடல்! உறவு!** முறையாக பார்த்தால்
அது **பாசம்** ஆகும். பெண்ணை ஸ்ரீ பகவதியாகவோ!
ஸ்ரீ அம்பிகையாகவோ! உணர்ந்தால் அது **அன்பு**
ஆகும் என ஸ்ரீ மகான்கள் சொல்வர்.

பாலா



காட்சிகளிலும், (15)
நிகழ்ச்சிகளிலும்,
உங்கள் மனம்
**மோஹம்**
கொண்டு தன்மையில்
பொறுமையை இழந்து
உடனே முடிவெடுக்கிறீர்கள். அதனால் கடும்
விளைவுகளை சந்திக்க வேண்டும்.

வினை பெருக்கமும், மனோபாரமும், தாவசிரமமும் அவஸ்யம் வரும். பொறுமையே உங்கள் நண்பன்.

உங்கள் கவனத்தில் இது மிக முக்கியம்!

(1) கண்களால் காண்பதை :- நேருக்கு நேராக, கண்டோமே என்றும், காண்கிறோமே என்றும், நீங்கள் காணும் காட்சிகளை, **உண்மையென** நம்பி விட வேண்டாம். அங்கு உங்கள் கண்களின் வழியாக, உங்கள் **மனம்** ஏமாற்றுகிறது.

(2) காதுகளால் கேட்பதை :- நேருக்கு நேராக, கேட்டோமே என்றும், கேட்கிறோமே என்றும் நீங்கள் கேட்கும் வார்த்தைகளை, **உண்மையென** நம்பி விட வேண்டாம். அங்கு உங்கள் காதுகளின் வழியாக, உங்கள் **மனம்** ஏமாற்றுகிறது.

(3) மேலே கூறிய இவ்விரண்டையும், மையமாக வைத்து, இதுவே **உண்மையென** நம்பி உங்கள் **வாக்கு!** புலம்பி! புலம்பி! **பழியாபத்தை** ஏற்றுக் கொண்டு, வினைகளை பெருக்கிக் கொள்ள **த** வேண்டாம் என்று, உங்கள் அனைவரின் திருவடி பணிந்து வேண்டிக்கொள்கின்றேன்! — பாபா.



உன் எண்ணமும் வேறு. (16)
அவன் எண்ணமும் வேறு.
ஆகவே நடைபெறும் காரியம்
நேர்மை முறையாகத்தான்
தோற்றமும். உங்களுடைய
பொறுமையும்! இறை குரு!

**நம்பிக்கையே**

உங்களுக்கு கவசம் ஆகும்.
அதுவே உங்களை வெற்றிப் பாதையில் இட்டு செல்லும்.

முன் கூறிய மூன்றும், ஒவ்வொரு ஜீவனுடைய,


**வினை! விதி! மனம்!**

இவைகளின் செயல்பாடாகும்!
இவைகளில், உடனே புரிந்து, உடனே ஓர் அவசர
**முடிவு!** எடுத்துவிட்டீர்களானால், அது
உங்கள் எண்ணங்களுடன், பின்னி விளையாடும்.
இதற்கு, உங்கள் மனமே பொறுப்பாகும்!

**இறை! குரு** உணர்வுடன் கூடிய எல்லாம் நீயே என **சரிந்து**

பொறுமையுடன் காத்திருந்து, அமைதி காத்தால்,
உங்கள் உள் உணர்வாகவோ! அசரீரியாகவோ!
அருகில் வரும் வாக்கு மூலமாகவோ! தூரக் காட்சி
மூலமாகவோ! இம்மூன்று நிலைகளில், ஏதேனும்
ஒன்றின் மூலமாக, உங்களுக்கு விடை கிடைக்கும்.
இது இந்த ஏழை உதவாக்கரை பரதேசி பைத்தியத்தின்
சுய அனுபவம் ஆகும். இங்குதான் புதிரான காரியம் இருக்கு.
என்பது உண்மையாகும். பதட்டம் வேண்டாம்
படபடப்பு வேண்டாம். வேகம்! ஆத்திரம்!
அவசரம்! வேண்டாம். பொறுமை வேண்டும்!

திரு பாபா.



எல்லாம் நீயே!
எல்லாம் உன்செயல்!
எல்லாம் உனதே! என்ற
சர்வார்ப்பணம் முழு
நிலை பெற்றுவி
மாற்றமோ! தடுமாற்றமோ!
ஏமாற்றமோ! வெறி உணர்வோ
உண்டாகாமல் அவன் பார்த்துப்பான்

(17)

ஒருமுகிய கவனம்
இம்மைக்கியம், மெய் அன்பர்களிடம் அறிவுடையாக
கூறும் போதெல்லாம். பெண்/பணம்
(ஆண் பெண் உறவு)
ஆசை அவசியம், கூடாது என சொல்வதன்,
ரகசியம்!

பெண் :- தர்மநீதி சாஸ்திரத்தின்படி, ஒருவனுக்கு
ஒருத்தி! என்றும், ஒருத்திக்கு ஒருவன்! என்றும்,
ஸ்ரீமஹான்கள் சொல்வர். அதன் காரணம் ??????
திருமணத்தின் பின்,
தமக்கென நியமிக்கப்பட்ட ஆணுடன் பெண்ணே!
பெண்ணுடன் ஆணே! சேரும்போது!
விழி! மனம்! மதி! ஆகிய இம்மூன்றும், ஒரே
நேராக அமைகிறது! அம்மூன்றும், மாறுபடுவதும் இல்லை.
பேதம் உண்டாவதும் இல்லை. காமக்கம்! அச்சுகலக்கம்
பயதுக்கம் உண்டாவதில்லை! இங்கே பாசமும்
நேசமும் பிணைந்து இணைகிறது. இதில் இன்பம்
இருவருக்குமே ஒன்றுபடுகிறது.
இது ஆனந்தமல்லவ!



தன் மனைவியை (18) தவிர வேறொரு பெண்ணை நாடி போனாலோ தன் கணவனைத் தவிர வேறொரு ஆணை நாடிப் போனாலோ! பலருடன் நாடி சேரும் நிலை உண்டாகும் என்று விதுர நீதி சொல்கிறது.

ஆணும் பெண்ணும்! **முறைகேடாக** ஒருத்தி பல ஆணுடனும்! ஒருவன் பல பெண்ணுடனும்! **உடல்** உறவு கொள்ளும் போது, அங்கு விந்து! மனம்! விதி! மாறுபாடும்! வேறுபாடும்! அடைவதால், **விந்** மாறுவதால் உடல் கரும்பாதிப்பு அடையும்!

**விதி** மாறுவதால், வினைகள் முரண்பாடாகி, பின்னிப் பிணைந்து **ஜெ** ஜன்மாவுக்கு விதி வழி வகுத்துக் கொள்ளும்!

**மனம்** எண்ண எழுச்சியினால், ஓர் **தடுமாற்றம்** உண்டாகி, **வெறி** உணர்ச்சி உண்டாகி, அதுவே **அசுர** உருவமாக மாறி! என்ன செய்கிறோம் என்ற நிலை தெரியாமல் **நடி** தடுமாற்றத்தால், மனிதமானம் மாறி! மிருகத்தனம் உண்டாகி,



19

இறை குரு
உணர்வு இருந்தால்
இவைகள் மாற்றி
அமைக்கப் படும்
அதாவது காம எண்ணம்
அகன்று அழிக்கப்படும்.
அங்கு வாழ்வு பாதகமாய்
அமையாமல் சாதகமாய்
அமையும் என மனுநீதி தான் சொல்லுது!

# மோகம், வேகம் கடும் காமம்!

இவற்றின் **வேகத்தால்???**

வீரியம் (விந்து) கெட்டு உடல் **நாசமும்!**

" ஞானத்திற்கு உரிய மறைபாவம் நாசமாமே " **அறிவு** "

" " **ரோகமும்!**

" " **மனை** " !

வினை! விதி! மனம்! தடுமாற்றத்தால்,

**கருவறையும்** (பிறப்பிறப்பும்)

அவசியம் உண்டு என, ஞானிகள் சொல்வர்.

இந்த மிக மிக, மிக மிக **சூட்சமமான** அந்த ரகசியம், இந்த ஏழை பாபாவுக்கு எப்படி தெரியும்? என கேட்கத் தோணுதா??? அவசியம் தோணத் தான் செய்யும்!!!

# யாம் ஓர் சர்வாந்தர்யாமி!!!

என மட்டும் உணரவும்.



(20)

பணத்தை உண்ண முடியாது. பணத்தை உடுத்த முடியாது. பணத்தை படுக்கையாக்க முடியாது. பணம் பெண் என ஆகாது. பணம் பொருள் என ஆகாது. என்பதே ஸத்தியம். ஆனால் பணம் இல்லாமல் இவைகளை பெற முடியாது.

(௨) பணம் :- இந்தவகை, வாழ்வும் வழிவகுக்கும் அழிவுக்கும் ”

பொதுவாக இதை, ” உயிர்கொல்லி.

என உண்மை பக்தர்களும், உணர்ந்த ஞானிகளும், சொல்வர். ஒருவனுக்கு உணவு, உடை, இருப்பிடம், ஆகிய இம் மூன்றும், அத்யாவசிய தேவைகள். இவைகளை, பணத்தால்தான் பெறமுடியும். ஆனால் பணத்தை உணவாகவோ, உடையாகவோ, இருப்பிடமாகவோ, நேராக பணத்தை அனுபவிக்க முடியாது. ஆகவே, வினைப் பெருக்கத்திற்கு இப்பணம் காரணமாக அமைகிறது.

இந்த பணத்தை நான் தேடினேன் என்றோ, என்னால் தான் முடிந்தது என்றோ, முடியும் என்றோ, எனது என்ற மமதை, உரிமை, பாராட்டினாலோ, இப்பணம் உயிர்கொல்லியாக மாறிவிடும் இது ஸத்தியம்.



ஸ்ரீ பகவான் நாமாவை (21)
சொல்லி பணத்தை
தேடலாம். அனுபவிக்
கலாம். தோஷமில்லை.
ஆனால்
பணத்தை நம்பியோ!
பணம் வைத்துக் கொண்டோ!
ஸ்ரீ பகவானை நம்புவதோ! தேடு
வதோ! கூடாது! முடியாது! இயலாது!
அது தோஷமாகும்!

பணத்தால் எல்லாம் முடியும்! என எண்ணுவது;
வினையும் பெருகும்! குணம் வக்ரம் அடையும்! அது
அழிவு பாதையாகும்!

தேவையான பணம் வரும்.

ஸ்ரீ பகவானால், எல்லாம் முடியும் என எண்ணுவது;
வினை பெருகாது! ஸத்வகுணம் மேலோங்கும்! உன்
வாழ்வு அமைதியோடு! அமைதியாக! ஆனந்தமாக அமையும்.

(A) பேச்சை குறை!

(B) நட்பு அதிகம் வேண்டாம்! (C) எதையும் பொறுமையுடன்
ஏற்றுக் கொள்! (D) கலக்கம்! சந்தேகம்! பயம் வேண்டாம்!
(E) எது நடந்தாலும், எல்லாம் இறைவன் செயலே!
எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என எண்ணு.
நலம் பெறுவாய். இருப்பது ஒன்றே எனை ஆட்டிப்படைப்பது
அது நீயே!

எல்லாம் ஒன்றே! அது சிவமே!

ஸ்ரீ பாபா

அதுவானே! யானே அது! இது ஸத்தியம்.


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!